# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 08 | திகதி : 13.05.2023 | விலை : 50.00


## 75 ஆவது அகவையில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



13.05.2023






*யாழ் திருஅவையில் உதித்த பேரொளியே*
*நீள் திருநிலையின் உத்தம சுடரொளியே*
*திருவருள் கூடியதால் பேரருள் திருவானீர்*
*இன்று பவள அகவையின் திருப்பேர் உருவானீர்*
*ஆன்மீக பசியுள்ளோர்க்கு*
*உயிரளிக்கும் மன்னாவாய்*
*அறிவுத்தாகம் உள்ளோர்க்கு*
*வழிகாட்டும் வால் வெள்ளியாய்*
*நீதிக்காய் தவிப்போர்க்கு*
*நடுநிலைமை செங்கோலாய்*
*துன்புற்று இளைத்தோர்க்கு*
*காப்பளிக்கும் பேழையாய்*
*"வல்லவர்கள் அல்ல*
*நல்லவர்கள் வேண்டும்"*
*என்ற மகுடம் தாங்கி*
*தொட்ட உங்கள் ஆயர்பணி*
*தொடு வானமாய் தொடர்கையிலே*
*நல்லாயனாய்த் தலைநிமிர்ந்து*
*நலிவுற்ற தமிழினத்தை*
*பசும்புல் வெளியில்*
*குளிர்ந்த நீரோடையருகில்*
*மேய்த்துவரும் மேய்ப்பன் உம்மை*
*நன்றியுடன் வாழ்த்துகின்றோம்*
*மாசற்ற அன்னையின் பரிந்துரையில்*
*இறையருள் வெள்ளப் பெருக்கெடுக்க*
*நாடி வரும் பேரருளில் நனைந்திடுவீர்*
*ஞாலப் பெருவெளியில் ஒளிர்ந்திடுவீர்*
*அதோ! ஞானப்பிரகாசமாய்...*

கவியாக்கம் : வசீகரன்

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.** (தி.பா : 127:1)

# துயரத்தின் வேளையிலும் இறைத்தந்தையுடன் ஒன்றித்திருந்தார் இயேசு

ஆண்டவராம் இயேசு, நம் உடலின் கல்லான இதயங்களை சதையாலான இதயங்களாக மாற்றுகிறார் என்று ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற திருப்பலியில் வழங்கிய மறையுரையில் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைத்தந்தை தன்னைக் காப்பாற்றுவார் என்று நன்றாக அறிந்திருந்ததால் அந்தத் துயரத்தின் தருணத்திலும் இயேசு தன்னை முழுவதும் இறைத்தந்தையிடம் கையளித்தார் என்றும் தெரிவித்தார்.

புனித மத்தேயு நற்செய்தியில் இயேசு கூறும், “என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்ற வார்த்தைகள் கிறிஸ்துவின் பாடுகளின் இதயத்திற்கும், நமது மீட்பிற்காக, அவர் அனுபவித்த துன்பங்களின் உச்சத்திற்கும் நம்மைக் கொண்டு செல்கின்றன என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைத்தார். இயேசு அனுபவித்த துன்பங்கள் ஏராளம் என்றும், அவரது பாடுகளின் துயரங்களைக் கேட்கும் போதெல்லாம். அவைநம்இதயங்களைத்துளைக்கின்றனஎன்றும், இவைஉடலின்துன்பங்கள்மட்டுமல்ல மாறாக, ஆன்மாவின் துன்பங்கள் என்றும் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவை அத்தனை துயரங்களிலும் நிச்சயமாக, அவர் இறைத்தந்தையுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார் என்றும் விளக்கினார்.

இயேசு நம்முடன் முழுமையாகவும் உறுதியாகவும் ஒன்றித்திருப்பதற்காக, இறுதி வரை நம்மில் ஒருவராக வாழ்ந்தார் என்றும், அதனால் நம்மில் யாரும் தனிமையாகவோ, நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு இருப்பதாகவோ உணரக்கூடாது என்றும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் எப்போதும் விரக்திக்கு இரையாகிவிடக்கூடாது என்பதற்காகவும், அவர் எப்போதும் நம் அருகில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அவர் கைவிடப்பட்டதொரு நிலையை அனுபவித்தார் என்றும் கூறினார்.

இப்படிப்பட்ட கைவிடப்படும் நிலைகளில்தான் இறைவன்நம்மைக்காப்பாற்றுகிறார் என்றும், சிலுவையில், முழுவதுமாகக் கைவிடப்பட்டதாக உணர்ந்தபோதும், இயேசு விரக்திக்கு அடிபணியாமல், இறைவேண்டல் செய்து, நம்பிக்கையுடன் இறைத்தந்தையின் கரங்களில் தன்னை ஒப்புக்கொடுத்தார் என்றும் கூறினார். புறந்தள்ளப்பட்டவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும் கிறிஸ்துவின் உயிருள்ள அடையாளங்களாக இருக்கின்றனர் என்றும், அவர்கள் கிறிஸ்துவினுடைய அன்பையும், தனிமையிலிருந்து நம்மை விடுவிக்கும் அவரது விடுதலையையும் நமக்கு நினைவுபடுத்துகின்றன என்பதையும் நினைவில் கொள்ளுமாறும் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார்.

கைவிடப்பட்ட நிலையில் உள்ள இயேசுவிடம் அன்பு கூர்வதுடன், நம்மைச் சுற்றிலுமுள்ள கைவிடப்பட்டவர்களிடம் இயேசுவைக் கண்டு அவர்களிடத்திலும் அன்பு கூர்வோம் என்றும், அப்போதுதான் நமக்காகத் தன்னையே முழுவதுமாக வெறுமையாக்கிய இயேசுவுடன் ஒரே எண்ணமும் ஒரே உள்ளமும் கொண்டவர்களாக இணைந்திருப்போம் என்றும் திருத்தந்தை அவர்கள் தெரிவித்தார்.

# இயேசுவுடன் சிறிது நேரத்தை செலவிட கற்றுக்கொள்வோம் திருத்தந்தை

அனைத்துப் பொருட்களின் வித்தியாசமான கோணங்களை நமக்குக் கற்றுத் தரும் இயேசுவுடன் ஒவ்வொரு நாளும், இரவு படுக்கைக்கு முன்னர் சிறிது நேரத்தைச்செலவிடக் கற்றுக்கொள்வோம் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்தார்.

ஏப்ரல் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு நண் பகல் அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ்அவர்கள், எம்மாவுஸ் செல்லும் வழியில் இரு சீடர்கள், உயிர்த்த இயேசுவைச் சந்தித்த நிகழ்வு குறித்து தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

எருசலேமில் இருந்து சென்ற சீடர்கள் தங்களுடன் நடந்த இயேசுவை அடையாளம் கண்டுகொள்ளாத நிலையில், இறைவார்த்தையின் ஒளியில் அனைத்து நிகழ்வுகளுக்கும் புதுக் கண்ணோட்டத்தை வழங்கி அவர்களை ஆறுதல்படுத்திய இயேசுவின் செயலைத் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

இந்தச்சீடர்களைப்போல்நாமும் நம் வாழ்வு நிகழ்வுகளை மீண்டும் நம் நினைவுக்குக் கொணர்ந்து. துன்ப துயர வேளைகளை இயேசுவுடன் பகிரும் போது அவரும் நம்முடன் உடனிருப்பார் எனத' திருத்தந்தை பிரான்சிஸ் திருப் பயணிகளிடம் கூறினார்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் நாம் நம் தினசரி நிகழ்வுகளின் நினைவு-களை இயேசுவுடன் பகிரும்போது அவை-களை வேறு கண்ணோட்டத்தில் பார்க்க நாம் அவரிடமிருந்து கற்றுக்கொள்வோம் என்று திருத்தந்தை எடுத்துரைத்தார்.

இயேசுவழங்கும்உண்மையால் நம்மைக் காயப்படுத்த நம்மை நாம் அனுமதிப்போம் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொரு நாள் நிகழ்வுகளையும் இரவு படுக்கைக்கு முன்னர் நம் மனக்கண்முன் கொணர்ந்து, நம் செயற்பாடுகளில் அன்பு இருந்ததா என்ற கேள்வியைக் கேட்டு, நம் வீழ்ச்சிகள், துயர்கள், சந்தேகங்கள், அச்சங்கள் ஆகியவைகளை இயேசுவின் முன்வைக்கும்போது, நம்மை ஊக்கப்படுத்தும்புதியவழிகளைஅவர்நமக்குத்திறக்கக் காண்போம் எனத் தன் அல்லேலூயா வாழ்த்தொலி உரையை நிறைவு செய்தார்.

# பணிவாழ்வின் வேர்களைக் கொண்டது திருமுழுக்கு – திருத்தந்தை

திருமுழுக்கு மற்றும் தூய ஆவியின் வரங்கள் பணிவாழ்வின் வேர்களைக் கொண்டுள்ளன என்றும், கிறிஸ்துவை நம்புவோர் அவரது சீடராக ஏற்றுக்கொள்ளப்பட்டு, சமூகத்திற்கான பயனுள்ள பணியினை ஆற்றுகின்றார்கள் என ஏப்ரல் 22 ஆம் திகதி சனிக்கிழமை வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் பொது நிலையினர், குடும்பம், மற்றும் வாழ்விற்கான திருப்பீடத்துறையின் நிறையமர்வுக் கூட்டத்தின்பங்கேற்பாளர்களைச்சந்தித்தபோது திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு கூறனார்.

ஒன்றிணைந்து பயணிக்கும் திரு அவையில், பொது நிலையினர் மற்றும் பணி' என்ற கருப்பொருளில் நடைபெறும் இக்கூட்டத்திற்குத் தனது வாழ்த்துக்களைத்தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொது நிலையினரின் பணி என்பது பேராயங்களின்சட்டங்கள்அடிப்படையில்அல்லமாறாக, திருமுழுக்கின் அடிப்படையில் சீடர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டதனால், செய்யப்படுவது என்றும் எடுத்துரைத்தார்.

தூய ஆவியின் வரங்கள் நம்பிக்கையுள்ள பொதுநிலையினர்வழியாக, சமூகத்திற்கான ஒரு பயனுள்ள பணியாக அங்கீகரிக் கப்படுகின்றது என்றும், குறிப்பிட்ட பேராயத்தின் வழியாக அப்பணி அறிமுகப்படுத்தப்பட்டு உலகமெங்கும் பரவுகின்றது என்றும் பேராயங்கள், சேவைகள், பணிகள், அலுவலகங்கள் ஆகிய அனைத்தும் ஒரு போதும் தனிப்பட்ட நபரை அடையாளப் படுத்தும்சுய குறிப்புகளாக மாறக்கூடாது என்று வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய சமூக, அரசியல் மற்றும் பொருளா-தார உலகில் கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பொது நிலையினருக்கு ஒப்படைக்கப்பட்ட இப்பணியினை, சமூகத்தின் மாற்றத்திற்கு நற்செய்தியைப் பயன்படுத்துவதில் உண்மையான அர்ப்பணிப்பு இல்லாமல் திருஅவைக்கு ஆற்ற முடியாது என்றும், மறைப்பணி, மக்கள் பணி ஆகிய இரண்டும் மிக முக்கியமானதாக கருதப்பட வேண்டும் என்றும் ஒவ்வொருவரும் திருமுழுக்கின் வழியாகவே தனது சொந்த வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டறிய முடியும் என்றும், ஆசீர்வதிக்கவும், உயிர்ப்பிக்கவும், விடுவிக்கவும், குணப்படுத்தவும், இந்தப் பூமியில் அவர் ஆற்றும் பணியினால் மகிழ்ச்சியின் ஒளியாக விளங்குவார்கள் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைத்தார்.

# முதியோர்களுக்கான சிறப்பு ஒன்றுகூடல்

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட முதியோர்களுக்கான சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் காலை சிறப்புத் திருப்பலியும் தொடர்ந்து முதியோர்களுக்கான மகிழ்வூட்டல் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் 50றகும் அதிகமான முதியவர்கள் கலந்து பயனடைந்தார்கள்.

# அகவொளி குடும்ப நல நிலையத்தால் மாணவர்களுக்கான கலந்துரையாடல்கள்

யாழ் அகவொளி குடும்ப நல நிலையத்தால் பாடசாலை மாணவர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த மாதம் 27 ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றன.

அகவொளி நிலைய இயக்குநர் அருட்தந்தை டேவிட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கல்லூரி அதிபர் அருட்தந்தை அன்ரன் அமலதாஸ் அவர்களது ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சிறப்பு நிகழ்வில் உயர்தரத்தில் கல்வி பயிலும் 50க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் நோக்காகக் கொண்டு நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகளும் குறுந்திரைப்பட காட்சிகளும் அதைப் பற்றிய கலந்துரையாடல்களும் இடம்பெற்றனு.இந்நிகழ்வுகளை அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை சுதர்சன் அவர்களும் அவருடன் இணைந்து திருவுள பணியாளர் சபையை சேர்ந்த அருட்தந்தை சணா அவர்களும் வழிப்படுத்தினார்கள்.

# துயர் பகிர்கின்றோம்

யாழ் மறைமாவட்டக் குருவாகிய அருட்தந்தை ஜோண் கனிசீயஸ் அவர்களின் அன்புத் தந்தை **திரு ஞானமுத்து அன்ரனி நீற்றர்** அவர்கள் கடந்த 25.04.2023 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் அருட்தந்தை பிலேந்திரன் மற்றும் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை வென்சஸ்லஸ் ஆகியோரின் சகோரனுமாவார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தையர்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மாநித்தியத்தில்இளைப்பாறஇறைவனிடம்மன்றாடி நிற்கின்றோம்.

# சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் மக்களின் பங்களிப்பு அவசியமானது

யாழ் கரித்தாஸ் கியூடெக் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் செயற்திட்டத்தின் கீழ்கடற்கரை சுத்தப்படுத்தலும், மரநடுகையும் யாழ் பண்ணையிலிருந்து நாவாந்துறை வரை சிரமதானம் மூலம் 26.04.2023 காலை 8.30 முதல் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடாக கடற்கரை சுத்தப்படுத்தும் சிரமதானமும் மரநடுகையும்செயற்படுத்த இராணுவம், பொலிஸ், சிறைச்சாலை அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள், யாழ் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நீர்வளப் பாதுகாப்புச் சபையினர், மதத்தலைவர்கள், சமூகத் தலைவர்கள், யாழ் மாநகரசபை உத்தியோகத்தர்கள், கிராம மக்கள், கியூடெக் கரித்தாஸ் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து சிரமதானப் பணியினை மேற்கொண்டதுடன் மரநடுகையினையும் சிறைச்சாலை முன்றலில் உள்ள கரையோரப்பகுதியில் மேற்கொண்டனர். இயக்குநர் தலைமையுரையில் “வளங்களைப் பாதுகாத்து சுற்றுச் சூழலை பாதுகாப்பதுடன் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். இதற்கு மக்கள் பங்களிப்பும் விழிப்புணர்வும் அவசியமானது என்றார்.

கடல் வளப் பாதுகாப்பு திட்ட அதிகாரி திரு.P.சதீஸ்குமார் உரையாற்றுகையில் “கடல் வளங்களைப் பாதுகாப்பதில் மக்கள் பங்களிப்பு அவசியமானதாகும். மாசடையும் கடல் நீரால் எமது வளங்கள் சிதைவடைவதால் கடல் உணவும் பாதிக்கப்படுவதுடன் சுற்றுப்புறச் சூழலும் மாசடைவதால் சூழலில் இருப்போரும்

நோய்க் காவிகளாக மாறுகின்றனர். இதனை உணர்த்தும் விழிப்புணர்வுக்கு யாவரும் கை கோர்த்துச்செயற்படுவது பாராட்டத்தக்கது. இதனைச் சிறந்த முறையில் செயற்படுத்தும் பல வழிகளில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் முன்நின்று செயற்படுவதுடன் மக்களை விழிப்புணர்வுடன் பங்கேற்க வைத்து பொறுப்புகளை பகிர்வதும் பாராட்டத்தக்கது.

சிறைச்சாலை அத்தியட்சகர் உதயகுமார் உரையாற்றுகையில் “எமது சூழல் மாசடைவதால் வனாந்தரமாகக் காட்சியளிப்பதை அக்கறையோடு மக்களை ஒன்றுகூட்டி அரச உத்தியோகத்தர்களையும் ஒன்றிணைத்து சுத்தப் படுத்த விழிப்புணர்வும் பங்கேற்பும் செய்த கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் முயற்சிக்கு என்றும் துணை நிற்போம்.

எமது சூழலை குளிர்மைப்படுத்துவது எதிர் கால வளங்களை பசுமையாக்க முன்னெடுக்கும் இயக்குநரின் முயற்சி பாராட்டத்தக்கது.” என்றார். பண்ணைக் கடற்கரையோரத்தில் இருந்து நாவாந்துறைச் சந்தை வரையானகரையோரப் பகுதிகள் சுத்தப்படுத்தியதுடன் சமூகப் பங்களிப்புடன் செயற்படுத்தியது சுற்றுச் சூழல் பாதுகாப்பின் சிறப்பம்சமாக விளங்கியது.

# உலக ஆயர்கள் மாநாட்டில் முதல்முறையாக பொதுநிலைப் பிரதிநிதிகள் பங்கேற்பு

## திருத்தந்தை பிரான்சிஸ் அதிரடி அறிவிப்பு

கூட்டொருங்கியக்கத் திரு அவையாவோம் என்ற தலைப்பில் இவ்வருடம் வத்திக்கானில் நடைபெறவுள்ள உலக ஆயர்கள் மாநாட்டில் முதல்முறையாக பொதுநிலை பிரதிநிதிகள் பங்குபற்று வார்கள் எனத் திருத்தந்தை அறிவித்துள்ளார்.

உலகெங்கும் இருந்து ஆயர்கள் அல்லாத 70 பேர் இம்மாநாட்டில் பங்குபெற அழைக்கப்படுவார்கள். பொதுநிலைப் பிரதி நிதிகள் தெரிவின்போது இளைஞர்கள் உட்பட ஐம்பது வீதமான வர்கள்பெண்களாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர கடந்த காலத்தில் பத்து ஆண் துறவி கள் உலக ஆயர் மன்றங்களில் கலந்து கொள்ள அழைக்கப் பட்டிருந்தார்கள். ஆனால் இம்முறை ஐந்து ஆண் துறவிகளும் ஐந்து பெண் துறவிகளும் பங்குபற்ற அழைக்கப்படுகின்றார்கள்.

இவர்கள் அனைவரும் மாநாட்டில் முழுமையாகப் பங்கு பற்றுவதோடு வாக்களிக்கும் உரிமையையும் கொண்டி ருப்பார்கள். கடந்த காலங்களில் நடைபெற்ற ஆயர் மாநாடுகளில் பொதுநிலைப் பிரதிநிதிகளும் பெண் துறவிகளின் பிரதிநிதிகளும் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டொருங்கியக்கத் திரு அவைக்கு கொடுக்கப்பட்டுள்ள "உங்கள் கூடாரங்களை அகலப்படுத்துங்கள்" என்ற கருப்பொருளுக்கு மேற்படி விடயம் அர்த்தம் கொடுப்பதாக அமைந்துள்ளது. இம்மாநாட்டின் தயாரிப்புக் காலத்தில் பொதுநிலைப் பிரதிநிதிகள் திருஅவையின் உயர் செயற்பாடுகளில் உள்வாங்கப்பட வேண்டும் மற்றும் திரு அவையில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஒலித்த குரல்கள் செவிமடுக்கப்பட்டன என்பதற்கு இவ் அறிவிப்பு ஒரு சான்றாகும்.

இவ்வருடம் ஒக்டோபர் மாதம் நான்காம் திகதி முதல் 29ம் திகதி வரை உலக ஆயர்கள் மாநாட்டின் முதலாவது அமர்வு நடை பெறவுள்ளது.

## யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவிற்கு புதிய இயக்குநர்



யாழ். மறை மாவட்ட அன்பிய ஆணைக்குழுவின் புதிய இயக்குநராக கிளரேசியன் துறவற சபையைச் சேர்ந்த அருட்தந்தை யூட் ஜோசப் ஜோய் மரியரட்ணம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் அண்மையில் நியமனம் பெற்று பணிப்பொறுப்பை இவர் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் கடந்த காலங்களில் அன்பிய ஆணைக்குழுவின் இயக்குநராகப் பணியாற்றிய அருட்தந்தை மில்பர் வாஸ் அவர்கள் பணி மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

## உலக ஆயர்கள் மாமன்றக் கூட்டத்தில் பங்குபற்ற ஆயரல்லாத எழுபது உறுப்பினர்கள்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்க ளால் உலக ஆயர்கள் மாமன்றக் கூட்டத்தில் பங்குபற்ற ஆயரல்லாத 70 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வத்திக்கான் செய்தி கள் தெரிவிக்கின்றன.

திருத்தந்தையால் நேரடியாக நியமிக்கப்பட்ட இந்த 70 நபர்களில் பொது நிலையினரும் அடங்குவர். அவர்களில் 50 வீதத்தினர் பெண்கள் மற்றும் அவர் களில் பல இளைஞர்களும் அடங்குவர் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

400-க்கும் மேற்பட்ட மொத்தப் பங்கேற்பாளர்களில் ஏறக்குறைய 370 வாக்களிக்கும் உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆயர்கள் மாமன்றத்தில் ஆயரல்லாத இவ் 70 பேரும் வாக்களிக்கும் உரிமையை அனுபவிப்பார்கள் என்றும் உலக ஆயர் கள் மாமன்றச் செயலகம் கூறியுள்ளது.

இம்மாற்றங்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொடங்கிய ஆயர் மாமன்றத்தின் ஒருங்கிணைந்த பயணப் பாதைக்கு முத்திரை பதிப்பவைகளாக அமைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கச்சதீவு புத்தர் சிலை அகற்றப்பட்டது

கச்சதீவில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டது தொடர்பாக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் யாழ். மாவட்ட செயலர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இக்கடிதத்தில் புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள கச்சதீவில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு விட்டதாகத் தமக்கு நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளதாகவும் இவ்விடயத்தை கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு உறுதிப்படுத்தியுள்ளதுடன் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு கச்சதீவுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டு விட்டதாகவும் அவர்கள் கூறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கச்சதீவில் புத்தர் சிலை நிறுவப்பட்ட விடயத்தில் கவனமெடுத்து கச்ச தீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவன செய்யுமாறு யாழ் மாவட்டச் செயலருக்குக் கடித மூலம் வேண்டுகோள் விடுத்ததற்கமைவாக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் குருமுதல்வர் நன்றி தெரிவித் துள்ளார். அத்துடன் இவ்விடயத்தை அமைதியான முறையில் தீர்த்து வைக்க ஒத்துழைத்த கடற் படை உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்படட குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

## தீவக மறைக்கோட்ட இளையோர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி



தீவக மறைக்கோட்ட இளையோர்களுக் காக முன்னெடுக்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி 22ஆம் திகதி கடந்த சனிக்கிழமை சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தலத்தில் நடைபெற்றது.

தீவக மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்தந்தை எட்வின் நரேஸ் அவர்க ளின் ஒழுங்குபடுத்தலில் யாழ். கியூடெக் கரித்தாஸ் நிறு வன இயக்குனர் அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற இந் நிகழ்வில் தீவக மறைக்கோட்டத்தின் அனைத்துப் பங்குகளி லிருந்தும் 85 வரையான இளையோர்கள் கலந்து பயன டைந்தார்கள்

## யாழ்ப்பாணத்தில் ரெனிஸ் போட்டிகள்

அகில இலங்கை ரெனிஸ் சங்கத்தின் அனு சரணையில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி நடாத்தும் தேசிய ரீதியிலான மூன்று நாட்களைக்கொண்ட தரப் படுத்தல் சுற்றுப்போட்டி கடந்த 28ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி நடைபெற்றன.

பாடசாலை மாணவர்களுக்கிடையே 14 வயதிற் கும், 18வயதிற்கும் கீழ்ப்பட்ட ஆண், பெண் தனிநபர் பங்கு பற்றும் தேசிய தரப்படுத்தல் மட்டத்திலான ரெனிஸ் போட்டி முதற்தடவையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

கொழும்பு, குருநாகல், மட்டக்களப்பு, கிளி நொச்சி யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து வருகை தந்த 59 மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பற்றியுள்ளனர். இப்போட்டிகள் புனித பத்திரிசியார் கல்லூரி, பரியோவான் கல்லூரி ரெனிஸ் திடல்களில் நடைபெற்றது.

கொழும்பு சென்று போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் இருந்த வடமாகாண ரெனிஸ் வீரர்களுக்குஇது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ள துடன் 175 வது ஆண்டை நோக்கி நகரும் புனித பத்திரி சியார் கல்லூரியின் ரெனிஸ் வரலாற்றில் இது ஒரு படிக் கல்லாக அமைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இறை இரக்க ஆண்டவர் ஆலய வருடாந்த திரு விழா

தர்மபுரம் பங்கிலுள்ள பிரமந்தனாறு இறைஇரக்க ஆண்டவர் ஆலய வருடாந்தத் திரு விழா கடந்த 16ஆம் திகதி அங்கு நடைபெற்றது.

திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி அங்கு நடைபெற்றுவந்த நிலையில் 15ஆம் திகதி நற்கருணை வழிபாட்டினை அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை பொஞ்சியன் அவர்கள் தலைமை தாங்கி நெறிப் படுத்தினார். பங்குத்தந்தை அருட்தந்தை நிக்சன் கொலின்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இத்திருவிழாவில் ஆலய முன்றலில் புதிதாக அமைக்கப்பட்ட இறைஇரக்க திருச்சுருபம் குருமுதல்வர் அவர்களால் ஆசிர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது. இத் திருவிழாவில் யாழ் மறை மாவட்டத்தின் பல பங்குகளிலிருந்து ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டனர்

## கிளறேசியன் சபை புதிய குருவின் முதற் திருப்பலி

புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட கிளறேசியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை சாள்ஸ் மத்தியூஸ் டெஸ்மன் ராஜ் அவர்களின் முதற் திருப்பலி அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் 26 ஆம் திகதி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் நன்றித்திருப்பலியும் தொடர்ந்து ஆலய முன்றலில் புதிய குருவுக்கான வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றன.

## இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் சின்னம் சூட்டும் நிகழ்வு

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை அங்கு நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் அருட்தந்தை மைக் மயூரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில கற்பித்தல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. சைன்தவி ஜனார்த்தனன் கலந்து நிகழ்வை சிறப்பித்தரர்.

இந்நிகழ்வில் 30 மாணவத் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டி வைக்கப்பட்டது.

## கத்தோலிக்க திருமறை பாடத்திற்கான செயலமர்வு

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி நிலையத்தின் அனு சரணையில் முன்னெடுக்கப்பட்ட க.பொ.த சாதாரண பரீட்சையில் கத்தோலிக்க திரு மறைப் பாடத்தில் தோற்றவுள்ள மாண வர்களுக்கான விசேட செயலமர்வு 28 ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை மறைக்கல்வி நடுநிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து 130 வரையான மாணவர்கள் கலந்து கொண்ட இச்செயல மர்வில் பிரதம வளவாளராக வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியர் செபநேசன் அவர்கள் கலந்து மாணவர்களை நெறிப் படுத்தினார்.

# கல்வியைக் கண்ணாகக் கருதியவர்

## எம் ஆயர் ஜஸ்ரின் ஆண்டகை

**பு**னித ஹென்றியரசர் கல்லூரி யால் வெளியிடப்பட்ட அருட்தந்தை அவர்களின் யூபிலி மலரில் ஆயரின் காலஞ்சென்ற தாயார் எமிலி தங்கமலர் அளித்த பேட்டியிலிருந்து ஒரு சில வரிகள்…

"அவர் கல்வித்துறையில் முன்னேறிப் பட்டங்கள் பெற்றதும் நாம் எதிர்பார்க்காத ஒன்று. யாழ்ப் பாணத்தில் தலைசிறந்த பாடசாலை களில் ஒன்றாக விளங்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு அதிபரானதும், நாம் மிகவும் மனமகிழ்ந்தோம். எந்நேரமும் அவர் சிந்தனை, அவர் செயல் எல்லாம் பாடசாலை பற்றியதே. பாடசாலையின் வளர்ச்சி பற்றியே எங்களுடன் அளவ-ளாவுவார். அவர் சிறந்ததொரு கல்விமானாக, பண்புமிக்க ஒரு குருவாக, ஒரு பாரிய நிறுவனத்தைக்கட்டிக்காத்த எதிர்கால நற்சந்ததியினை உருவாக்கும் அதிபராக விளங்குவதில் என்மனம் மிகவும் பெருமை கொள்கிறது.

மேற்கூறப்பட்ட வரிகள் அத்தாய் மனதில் மகன் கல்விக்காகச் செய்த பணிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றது. உண்மையில் கல்விமான்கள், கல்வியியலாளர்கள் எமது ஆயரின் கல்விப்புலம், கல்விச் செயற்பாடுகள் பற்றி அவரின் கல்வித்துறை சார்ந்த தாகம் பற்றி அறியாமலில்லை.

**கல்வித்தறை சார்ந்து அவர் கொண்டிருந்த பதவிகளை இங்கு வரிசைப்படுத்தலாம்.**

01.06.1976 - 30.08.1979
புனித ஹென்றியரசர் கல்லூரி
01.09.1979- 01.09.1980
Dubline Research Centre
05.09.1980 - 07.09.2002 -
புனித ஹென்றியரசர் கல்லூரி
21.02.1989 -07.09.2002
அதிபர் ஹென்றியரசர் கல்லூரி
28.01.2002 - 31.12.2007
அதிபர் புனித பத்திரிசியார் கல்லூரி

**பத்திரிசிய பயணத்தில் எனது பார்வையில்**

2002ம் ஆண்டு முதல் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆயர் அவர்கள் அதிபராக 2007ம் ஆண்டு வரை பணிபுரிந் தார். இக்காலப்பகுதியில் கல்லூரி யின் வளர்ச்சிக்காக அவர் செய்த பணிகள் பற்பல. புதிய அதிபரின் வருகையால் முன்னர் பத்திரிசிய கல்லூரியில் இருந்த மேன்மையான, உன்னதமான நிலை மேன்மேலும் மெருகூட்டப்பட்டது. கல்வித் தத்துவத்தில் உள்ளடக்கப்பட்டவாறு கல்லூரியின் கல்விச் செயற்பாடு களுக்கு மேலதிக கல்விச் செயற்பாடுகளில் அனைவரின் கவனம் ஈர்க்கப்பட்டது. கழகங்கள், சங்கங்களின் செயற்பாடுகளின் ஊடாக மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். ஆசிரியர்களின் நலன்களில் அதிக கவனம் எடுத்துச் செயற்பட்டார்.

கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம் என உணரப் பட்டதுதான், அது மென்மேலும் உணரவைப்பதில் வெற்றி உண்டு என்பதை ஆயர் அவர்கள் உணர்ந்து அவர்களுடனான சந்திப்புக்களைத் துரிதப்படுத்தினார். சந்திப் புக்கள் சடுதியாகச் சரியவில்லை நிமிர்ந்தன. புதிய கட்டட நிர்மாணத் துறைக்கான நிதி சேகரிப்பு, மாண வர்களின் வளர்ச்சி நிதி என்று நிதி சேகரிக்கப்படும் பணியில் பழைய மாணவர்களை ஒன்றுதிரட்டினார். சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கு இணங்க அதிபர் தந்தையரின் இச் செயற்பாடு கல்லூரியின் வளர்ச்சிக்கு பேருதவியாக அமைந்தது எனலாம்.

கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதில் கட்டிடங்கள் ஏதோ ஒரு வகை யில் பங்களிப்புச் செய்கின்றன என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் கல்லூரியின் நுழைவாயிலை அழகுற வடிவமைத்து நி-றுவினார். வண.பிதா.லோங் அடிகளாரின் நினைவாக நிறுவப்பட்ட கட்டடத் தொகுதியை நிறைவாக்கி வெற்றி கண்டார். இதுதவிர மாநாட்டு மண்டபம், புவியியல் அறை, மல்ரிமீடியா அறை, வகுப்பறைகள் என இவரது எண்ணத்தில் உதயமானது, பல உருவாக்கம் பெற்றன. இவர் ஆயரான பின் கார்டினர் கட்டடம், விடுதிக்கான மாடிக் கட்டடம் எனபன உருவாவதில் முன்னின்று உழைத்தவராக விளங்குகிறார்.

கல்வியும் விளையாட்டும் ஒரு மாணவனின் இரு கண்கள் போன்றவை என்பதில் நம்பிக்கை கொண்ட இவர், கல்வியைப் போன்று விளையாட்டுத் துறை-றையையும் மேம்படுத்தத் திட்டங்கள் பல வகுத்தார். எமது கல்லூரி விளையாட் டுத்துறையில் பல சாதனைகளைப் புரிய களம் அமைத்துத் தந்தார். கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் எமது கல்லூ ரியின் அணியை முதன்முதலில் பங்குபெறச் செய்தார். இவரது பணிக் காலத்தில் 19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணி "மைலோ கப் (Milo Cup)" நடாத்திய போட்டியில் வென்று பிரிவு 2 சம்பியன் ஆனது. 2005 இல் சமாதானத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் எமது கல்லூரி 2ம் இடத்தைப் பெற்றது. 17 வயதுப் பிரிவினருக்கான "அஸ்ரா கப்" கிரிக்கெட் போட்டியில் எமது அணி சம்பியன் ஆனது. ரெனிஸ் விளையாட்டு மீண்டும் தலைதூக்க யூனியர், சீனியர் அணிகள் வடமாகாணப் பாடசாலைகள் மட்டத்தில் வெற்றிவாகை சூடியது இவரது காலத்தியேயாகும்.

மாணவர்களின் நலன்கருதி கணனிக்கூடம், ஆங்கிலக்கூடம் ஆகியவை நிறுவப்பட்டன. எமது கல்லூரி வரலாற்றில் இவரது காலத்திலேயே ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுக் கற்பித்தல் அனுபவங்களைப் பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. நவீன கற்பித்தல் நுட்பங்களை அறிந்து கொள்ளும் நோக்குடன் 2005ம் ஆண்டு சி.ஸ்ரனிஸ்லாஸ், D.C.C.சந்தியாப்பிள்ளை ஆகிய ஆசிரியர்கள் இந்தியாவில் உள்ள தஞ்சாவூர் கிறிஸ்தவ கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் இவரது கல்லூ ரியில் ஆங்கில மொழிமூலமான கற்கை நெறி அறிமுகப்படுத்தப்பட்டு, மேற்கத்தைய நாடுகளிலிருந்தும் ஆசிரியர்கள் இங்கு வரவழைக்கப்பட்டனர். 2003 ஆம் ஆண்டு அயர்லாந்திலிருந்து செல்வி.கிளையா அவர்களும், அவுஸ்ரேலியாவிலிருந்து செல்வி.ஜெனிஸ்லா சவிரிமுத்து அவர் களும், 2004ம் ஆண்டில் அவுஸ்ரேலி யாவில் இருந்து செல்வி.சுகிர்தா அவர்களும் எமது கல்லூரிக்குச் சமூகமளித்து ஆங்கில மொழி கற்பித்தலில் ஈடுபட்டிருந்தனர். 2007ம் ஆண்டில் ஆங்கில மொழிமூலமான கற்கை நெறி மாணவர்கள் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 100 வீதமானவர்கள் சித்தியெய்தி எமது கல்லூரிக்குப் புகழ் சேர்த்தமையும், செல்வன் எம்.மதுசன் 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் 2ம் இடத்தைப் பெற்றமையும் தந்தையவரின் காலத்திலேயாகும்.

2007ம் ஆண்டு அதிபராக இருந்த ஆயர் அவர்கள் அயர்லாந்துக்குமேற்கொண்ட விஜயத்தின்போது டப்ளின் கிறிஸ்தவ அருட் சகோதரர்களைச் சந்தித்தபோது எமது கல்லூரியின் வளர்ச்சி பற்றிய திட்டங்களை முன்வைத்தார். டாக்டர் மேரி.ரொமி அவர்கள் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வந்தார். அத்துடன் C.B.Cஅதிபரான திரு.பக்கிற்றிங் அவர்களும் எமது கல்லூரியின் கல்வி முயற்சிக்கு உதவ முன்வந்தார். ஆசிரியர்கள் பரிமாற்ற



செயற்திட்டத்தின் கீழ் கிளாயா அவர்கள் அயர்லாந்திலிருந்து இங்கு வருகை தந்து, எமது கல்லூரியில் சில வருடங்கள் பணியாற்றினார். எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியை திருமதி C.Y.இராமகிருஷ்ணன் அவர்கள் இத்திட்டத்தின் கீழ் அயர்லாந்தி லுள்ள CBC இல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டார்.

நினைத்ததை முடிக்கும் செயற்றிறன் இவரிடம் பரிபூரணமாக நிறைந்திருந்தன.

**திரு.சி.ஸ்ரனிஸ்லாஸ்**
ஓய்வுநிலை ஆசிரியர்
புனித பத்திரிசியார் கல்லூரி

பேச்சாற்றல், நேரம் தவறாமை ஆகிய நற்பண்புகள் அவரோடு ஒட்டிப் பிறந்தன. பலரையும் ஈர்த்துப் பணிபுரிகின்ற வேலை களைப் பூர்த்தி செய்கின்ற ஆளுமைத்தன்மை அவரிடம் அகலமாகவே காணப்பட்டன. குறித்த நேரத்தில் உறுதியான முடிவெடுப் பதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். பதட்ட மின்றி எதனையும் அமைதியாகச் சிந்தித்து ஆசிரியர்களின் ஆலோசனையுடன் செயலாற்றினார். குறித்த பொறுப்புக்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்களை நியமித்து கல்லூரிச் செயற்பாடுகள் செயற்றிறன் மிக்கதாகிட வழிவகுத்தார். பிரச்சினைகளை, சவால்களை எதிர்நோக்கியபோது புன்னகை வதனத்துடன் அவற்றை எதிர்கொண்டு, தீர்வு கண்டார். பிரச்சினைகள் அவரைக் கண்டு பின்வாங்கின. முரண்பாடுகள் அவரைக் கண்டு முண்டியடித்து அகன்று போயின. ஆளுமையின், அமைதியின் அன்பனாக அவரைக் கண்டு அனுபவித்தாள் எமது கல்லூரித் தாய்.

ஆயர் அவர்கள் எமது கல்லூரி அதிபராகப் பணிபுரிந்த போது யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வராக அறிவிக்கப்பட்டார். கல்லூரியில் அவரது சேவைக்காலம் நிறைவுபெறுவதற்கு முன்பே தனது பணியை இன்னொருவருக்கு வழங்கிச் சிறப்பித்தார். மற்றவர்களுக் கும் வாய்ப்பளிக்கும் வகையிலேயே அவரது இச் செயற்பாடு அமைந் திருந்தது. பதவியைத் தொடர்ந்தும் பற்றிக்கொண்டிருக்காது, ஏனை யோருக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் மனநிலை அவருக்குரித்தான தனிச்சிறப்பாகும்.

தந்தை அவர்கள் ஆயரா-கத் திருநிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் சமய, சமூக அக்கறை கொண்டவராக விளங்கினார் என்பதற்குப் பல சான்றுகளை முன் வைக்கலாம். அல்லைப்பிட்டியில் சர்வதேச பாடசாலை உருவாக்கம் பெறுவதற்கு ஆயர் அவர்களின் பங்களிப்புக் காத்திரமானது. இந்தியா விலிருந்து மொன்பேட் சபையின் அருட்சகோதரர்களை இங்கு வர வழைத்து இத்திட்டத்தினை நிறை வேற்றினார். இப் பாடசாலை ஆங்கில வழிக் கல்விக்கூடமாக விளங்குவத னால் தீவுப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமன்றி, ஏனைய மாணவர்களுக்கும் இத்திட்டம் நன்மை பயக்கும் என எண்ணலாம்.

வறுமையின் சுமையோடு வாழ்ந்து கல்விகற்கத் தகுதியான மாணவர்களுக்குப் பங்குத்தந்தை யர்களின் ஆதரவுடன் அவர்களது கல்வி வளர்ச்சிக்கான நிதியுதவியைப் பெற்றுக்கொடுப்பதில் ஆயர் அவர் களின் பணி சிறப்பான முயற்சியா கும். இப் பணியை அவர் கியூடெக் நிறுவனத்தின் ஊடாகவும் மேற் கொண்டு வருகின்றார். பெற் றோரை இழந்த வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் பல நிறு வனங்களின் ஊடாக உதவிகளைப் பெற்று உதவி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பெற்றோர் அற்ற வறிய மாணவர்கள் கல்வியைக் கைவிட்டுத் தொழிலில் ஈடுபட நேர்ந்தபோது, அவர்களைச் சந்தித்து மீளவும் அவர்களின் கல்விக்காக முயற்சிகள் பல செய்தார்.

தந்தையர்களின் வழிநடத்த லில் பாடசாலைகள் வளரவேண் டும் என்பதற்காகவும், மாணவர்க ளின் உருவாக்கத்திற்கு அருட்பணி யாளர்களின் ஒத்துழைப்பும், பங்களிப் பும் அவசியம் என்பதை உணர்ந்த இவர், பாடசாலைகளுக்கு அருட்பணி யாளர்களை உள்ளீர்க்கும் உத்தியைக் கண்டுபிடித்து அதில் வெற்றியும் கண் டார். அருட்பணியாளர்களை ஆசிரியர் களாகவோ அல்லது அதிபர்களாகவோ நியமிக்க இவர் செயலாற்றும் விதம் பாராட்டப்படவேண்டியதொன்றே.

மூன்றாம் நிலைக் கல்வி மூலம் பலருக்குத் தொழில்வாய்ப்பைப் பெற்றுத்தரும் நோக்கில் யாழ். பற்றீசி யன் நிறுவனத்தை சலேசிய சபை யிடம் கையளித்து, அதன் மூலம் மூன்றாம் நிலைக் கல்விக்கு முக்கியத் துவம் வழங்கியுள்ளார். கரடிப்போக்கி லும், முழங்காவில் பிரதேசத்திலும் தொழிற்பயிற்சிக்கூடங்களை ஆரம்பித்து, எமது பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்லதொரு வாழ்வை அமைத்திட ஆவன செய்துள்ளார்.

முடிவாக 'தந்தை என்னை அறிந்திருக்கின்றார். நானும் தந் தையை அறிந்திருக்கின்றேன். நான் என் ஆடுகளை அறிந்திருக்கின் றேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக் காக எனது உயிரைக் கொடுக்கின் றேன்"(யோவான்10:15). என்ற இறை வார்த்தைகளுக்கு ஏற்ப உங்கள் பணி மேம்பட இந்த நல்லநாளில் வாழ்த்துகின்றோம். சவால்கள் உங்கள் முன் சரணடையவும், வெற்றிகள் உங்களை வந்தடையவும் எமது பாராட்டுக்களைக் கூறி, ஆண்ட வர் இயேசுவின் வழிநடத்துதலிலும் தேவதாயின் பாதுகாப்பு உங்களுக்கு என்றும் எப்போதும் கிடைக்க ஆசிகள் கூறி வாழ்த்துகின்றோம். வாழ்க, வளர்க உங்கள் பணி.

# ஒரு மௌனப்புரட்சியில் ஆயர்

## பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை



ஆயர் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் 75 வயது அகவையை நோக்கிய பயணத்தில் அவர்களது நெடியகால விரிப்பில் குருவாக, ஆயராக தூர நோக்குடன் மறை மாவட்ட வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளின் ஒரு சில நீக்க முடியாத நினைவுகளை மீட்டுப் பதிவிடுவது பொருத்தமாகும்.

வெளியுலகில் நாம்காணும் அதிசயப் படைப்பின் காரணியாக நிலத்தடியில் நடக்கும் விருட்ச விதைகளின் மௌன மடிவுகள் இயற்கைத்தாயின் செய்தி. குறுகிய கால எல்லைக்குள் மௌனத்தில் உறைந்துள்ள ஆயர் அவர்களின் பணிகள் பாராட்டுதற்குரியது.

பலப்படுத்தியுள்ளதும் நோக்கற்பாலது.

**ஒரு பன்முக ஆளுமை:**

மனித உறவுகளுக்கு மதிப்பு. "குருதியில் நம்பிக்கை வைப்பது தான் எனது பெருஞ்சமயம், ஞானத்தைவிட உடல்சார் அறிவு உண்மையானது. எமது உள்ளம் பிழை போகலாம் ஆனால் எமது குருதி சொல்வதும், உணருவதும், நம்புவதும் பொய்க்காது" கூறுகிறார் ஜி.பி லோறன்சு என்னும் அறிஞன்.

தலைமை ஆயன் என்ற மட்டில் அமைப்பையும் அதேவேளை யில் மனித உறவுகளைக் கட்டிக் காப்பதும், இது இரண்டுக்குமான வெளியை அகலப்படுத்தாமலும், சுருக்காமலும் சமச்சீருடன் கொண்டு செல்வது கடினமாயிருப்பினும் இறை யரசின் முக்கிய விழுமியமான மனிதத்திற்கு இல்லாக்குறையை பூர்த்திசெய்கிறார்கள் இது ஆயர் அவர்களுக்குப் பொருந்தும்.

**நல்லிணக்கத்தில் நிதானம்**

வெளிப்படையாக அரசியல் பேசா விட்டாலும் அதையும் அவருக்கு உரித்தான முறையில் அவரைச் சந்திக்க வரும் வெளிநாட்டுப் பிரமுகர்கள், முக்கிய பிரபல்யங்களுடன் மிகத் தெளிவாகத் தலைமுறை தலைமுறையாக அரசியல் தீர்வின்றித் தமிழ் மக்கள் சந்திக்கும் அவலங்கள், போர் விட்டுச் சென்ற அழிவுகளையும் அதற்கான தீர்வுமுறைகளையும் எடுத்துரைப்பார். அன்றாட நாட்டு நடப்புக்கள் அரசியல் களங்களை யாழ்மறைமாவட்ட நீதி சமாதனத்திற்கான ஆணையம் முண்டுகொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை!

**'மறைநதி' ஊடகமையம்**

காலத்துக்கேற்ற படைப்பாக 'மறைநதி' கத்தோலிக்க ஊடக மையத்தை அதன் அலகாக 'மறை யலை' தொலைக்காட்சி தொடக்கியதும் குறிப்பிடப்படவேண்டியது. செய்திகள் பரிமாற்றத்திலிருந்து சிந்தனை உருவாக்கம் வரை ஊடகங்களின் ஆதிக்கம் எங்கும் வியாபித்து இருக்கிறது. ஒரு புறம் ஊடகங்களின் வியக்கவைக்கும் வளர்ச்சியும் மறு-புறம் மனித மேம்பாட்டை திசை திருப்பும் ஊடகங்களின் இன்றைய நிலை. இத்தகைய ஊடகங்களால் இறைவார்த்தையும் கூட சுருக்கப்படும் திசை திருப்பப்படும் அபாயமும் அன்றாட எதார்த்தங்களே. மனி தன் கட்டுப்படுத்தவேண்டிய மக்கள் ஊடகங்கள் மக்களைக் கட்டுப்படுத்து வது இன்றைய நிலை. இத்தகைய சூழலில் இறையியல் தேடலை நோக்கி மட்டுமல்ல




ஆயர் தந்தை அவர்களுக்கு முன் சென்ற மூன்று ஆயர்களின் ஒருசில பணிசார் குணநலன்களை இவரிலும் ஊடாடி இருக்கிறது புலனாகிறது. அது மாவட்ட வளர்ச்சிக்கான தொடர் தேவை என்றும் நோக்கலாம்.
அமரர் ஆயர் ஜெறோம் எமிலியானுஸ் பிள்ளை அவர்கள் வன்னி, மன்னார்ப் பகுதிகளின் மூலமுடுக்கு களில் பள்ளிகளைத் தொடக்கி, கத்தோலிக்க விழுமியங்களை வளர்ப்பதில் ஆவல் கொண்டிருந்தது போல, ஆயர் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் போ-ரின் தாக்கத்தினால் நலிவடைந்திருக் கும் கல்வியை வளர்த்தெடுப்பதற் குத் தனது ஆயத்துவ பணிக்கு முன் னுரிமை கொடுத்து. இதன் விளை வாக பல குருக்கள் ஆசிரிய பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டு பின்தங்கிய கிரா மங்களில் பணிபுரிவது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் பொறுப்பெடுத்த ஆயர் தியோகுப்பிள்ளை அவர்கள் பாரிய நிதி நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருந்தும் தனது நிர் வாகத்திறனால் நிதி நிலைமையை நெறிப்படுத்தியது போன்று போரின் தாக்கத்தினால் அழிவுக்குள்ளான ஆலயங்களையும் குருமனை களையும் அமைத்தது மட்டுமல்ல மக்கள் தேவை கருதி புதிய ஆலயங்களை உருவாக்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் அவர்களின் காலம் போர் மேகங்களினால் சூழ்ந்திருந்தது. இக்கட்டான சூழலில் மறை மாவட்டத்தில் நிதி நிலைமையை சரியான பாதை யில் கொண்டு சென்றுள்ள விதத்தில் ஆயர் தந்தை யஸ்ரின் அவர்களும் இலங்கை பாரிய பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கும் இக்கட்டான சூழலிலும் மறைமாவட்ட நிதிநிலைமையை முன்னுரிமை கொடுத்து, மனித உறவை பாதுகாத்துத் தனது பணியை ஆயர் தந்தை அவர்கள் நகர்த்துவது சிறப்பு அம்சமாகும். அமைப்புகள் மனிதத்தைப் பெலவீனப்படுத்த முடியாது. ஓர் அருட்பணியாளர் கூறி-னார் 'அறநெறியில் வழி நடாத்துவதற்கு அறச்சினம் கொண்டு உரைத்தாலும், அவரிடம் மனிதம் குடிகொண்டிருந்தது'. விழுந்தால் தூக்கி விடுவதும், நலிந்தால் தட்டிக்கொடுப்பதும், தடவைகள்பல

**அருட்பணி அமிர்த யெயசேகரம்**

மன்னிப்பு அளிப்பதும் திருந்துவதற்கு வாய்ப்புகள், வசதிகள் கொடுத்து மந்தைக்கு வெளியில் தூக்கி எறியாமல் உள்ளே வைத்து அரவணைத்து நடத்துவது ஆயரின் இயல்பாகும்.

**தலைமைத்துவப் பண்பு.**

நல்ல தலைவருக்கு சில முடிவுகள் எடுப்பதற்குத் துணிவு தேவை. "கடவுள் நமக்குக் கோழை உள்ளத்தினையல்ல வல்லமையும் அன்பு நிறைந்த உள்ளத் தையே வழங்கியுள்ளார் (2 திமோத்தேயு 1:7) சிறந்த தலைவர்கள் எப்போதும் தீர மிக்கவர்களாக இருப்பர். தன்முனைப்பு களிலும் முயற்சிகளிலும் ஆர்வம் காட்டுவர், தோல்வியடைந்தாலும் கற்றுக்கொள்ளும் அனுபவமாகவே பார்ப்பர் என்பது ஆயர் அவர்களின் வாழ்வியலாக இருக்கிறது.

**பணிகளைப் பகிர்தல்**

ஒரு சிறந்த தலைவர் தனது பணிகளைப் பகிர்ந்து அடுத்தவர்களைப் பயிற்றுவிப்பது ஆயருக்கு நிகர் அவரே. எல்லாவற்றையும் தாங்கள் செய்து முடிக்கவேண்டுமென்று நினைப்பவர்கள் மறைமுகமாகத் தாங்கள் எவரையும் நம்புவதில்லையென்று கூறுவார்கள் எல்லாவற்றிக்கும் கவனம் செலுத்துவதால் தங்கள் எல்லையைக் குறுக்கிக் கொள் வார்கள் வெற்றிகரமானவர்களின் திற மைகளை கணக்கில் எடுத்து பயன் படுத்துகிறார்கள் தங்களுடைய ஊடாகச் செயற்படுத்தி வருவது அவருடைய வழி முறையாகும். மக்கள், குருக்கள் துறவி கள் பாதுகாப்புக் கருதி, பாதுகாப்பு படையினருடன் நிதானமாக நடப்பதும் அவதானிக்க முடிகிறது.

**ஒருசில மைல்கற்கள்**
**மொன்போட் பன்னாட்டுக் கல்வி நிறுவகம்.**

கல்விப் புலத்தில் நான்கு தசாப்த காலமாகப் பணிபுரிந்து நன்கு தேடியும் உரையாடியும் பெற்ற அறிவில் சமூகத்தின் பொருளாதார பின்னடை வையும் வாழ்வாதாரத்தையும் அவதானித்து இலங்கையின் போட்டிக் கல்வியையும் வெளிநாட்டுக் கல்வியின் தராதரத்தை ஊடறுத்து செயற்படுவதற்கு ஏற்றதாக ஆழ்மனதில் வெளியான பிரசவம்தான் மொன்போட் கல்விநிறுவகம். இந்தியாவில் 100 க்கு மேற்பட்ட கல்லூரிகளைத் திறம்பட நடாத்தும் மொன்போட் அவையினரைத் தேழப்பிடித்து இங்கு அழைத்து பின்தங்கிய இடமாகிய அல்லைப்பிட்டியில் காணிவழங்கி பலவாய்ப்புக்கள் வசதிகள் கொண்டு உருவாக்கியது அவர் பணியின் முக்கிய மைல்கல். நலிவடைந்திருக்கும் எம்மக்களின் வாழ்வாதாரத்திற்கு இத்திட்டம் ஒரளவு





வாழ்வியல் பெறுமானங்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மாற்றுச் சிந்தனைகளை விரல் நுனி யில் பெற்றுளக்கொள்வதற்கு ஏதுவாகக் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஓர் ஊடக நிறுவகம்!

இங்கு ஓர் ஆளுமையின் பணிவாழ்வுப் பின்புலத்தில் 'மௌனம்' என்ற வார்த்தை சிலாகிக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் அநீதிகள் இடம்பெறுகையில் மௌனம் சாதிப்பது முறையானது என்று பொருள்படக்கூடாது.

தொடரும் பணிகள் நிறைவடைய உடல் உளவளங்கள் அதற்கு ஈடுகொடுக்க மன்றாட்டுகள் கலந்த வாழ்த்துகளுடன்

# காவலன் கலசம்

# உள்ளுணர்வுச் சக்திகள்



அருட்பணி வின்சன் பற்றிக்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

எனவே வளமான வாழ்க்கைக்கு சக்தித் திட்டமானது (Energy plan) நிகழ்தகவுள்ளதாய், நியாயமானதாய் அமைவது அவசியமாகின்றது.தன்னிறைவு காணுதல், மனித உறவை வளர்த்தல், மற்றவர்களை வாழவைத்தல், மற்றவர்களை மகிழ்வித்தல், சமூக மறுமலர்ச்சியை உருவாக்குதல் போன்றன சார்பாக உளச் சக்தி செலவிடப்படுதல் வேண்டும். மதி நுட்பம், மாற்றுத்திறன், நவீனப்படுத்தல்போன்றவையே சக்தி சேமிப்பு சக்தி செலவிடுதல் தொடர்பாக நிறைவுபடுத்தும். மனத்தின் வெளிப்பாட்டுக்கான எண்ணங்கள் ஒருமுகப்படுத்தப்படும் பொழுதே சக்தி முழுமைப்படுத்தப்படுகின்றது.

நேரிய சிந்தனைகளினால் மனம் நிரப்பப்படும் பொழுது மனம் சக்தி படைத்ததாகின்றது. “உங்கட முகம் ஒரு மாதிரியிருக்கு; உங்களுக்கு. சுகமில்லைப் போலிருக்கு” என்று ஒரு சுகதேகியைப் பார்த்துக் கூறும் ஒருவர், அவரது மனத்தை அந்த ரீதியில் சிந்திக்கச் செய்து இல்லாத நோயினை உருவாக்குகின்றார். “நீ ஒரு சிறந்த எழுத்தாளன்; உன்னோடு உறவு கொள்வதில் நான் பெருமையடைகின்றேன். உனது நல்ல மனம் என்னை நலம் பெறச் செய்துவிட்டது; உன்னோடு செலவிடும் ஒவ்வொரு வினாடியும் என் மனமதன் நிறைவேயாகும்” என்று பலர் தொடர்ந்து கூறும்பொழுது ஒருவரது உள்ளம் வலிமை பெறுகின்றது. அழிவுச் சிந்தனைகளை ஒழித்தலும் ஆக்கச் சிந்தனைகளை வளர்த்தலும் கொடிய மனிதர்களின், கூடிய செயற்பாடுகளை மறந்தலும் உயர்ந்த மனிதர்களின் உயரிய கொள்கைகளை நினைத்தலும் மனச் சக்தியின் வளர்ச்சிக்கு ஆதாரமாகின்றன. நலமானவற்றையும் வளமானவற்றையும், உயர்வானவற்றையும், உண்மையானவற்றையும் தொடர்ந்து அடிக்கடி அவதானித்து, சிந்தித்து வந்தால் நல்ல மனம் வளரும். உயர்ந்த உள்ளம் உருவாகும். இவ்வாறு உளச்சக்தி நெறிப்படுத்தப்பட்டு எம்மை முழுமைப்படுத்த முனைகின்றபோது அன்றேல் மனித முன்னேற்றத்தை உருவாக்குகின்றபோது சில காரணிகள் சாதகமாகவும் சில காரணிகள் பாதகமாகவும் காணப்படலாம். எனினும் ஈற்றில். “ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே” பழமொழி மறைய“ஆவதும் எம்மாலே அழிவதும் எம்மாலே” புதுமொழி பிறக்கிறது. அதாவது வாழுவதற்கும் வாழவைப்பதற்கும் மகிழ்வதற்கும் மகிழவைப்பதற்கும் அன்றேல் மாறுவதற்கும் மாறவைப்பதற்கும் நாமே பொறுப்பு.யார் அழுதால் என்ன? யார் சிரித்தால் என்ன? என்று ஏனோதானோ நிலையில் நாம் இருந்து விட்டால் எல்லாம் சுலபமாகி விடுமா? பொறுப்பின் சுமைக்கு அஞ்சி வெறுப்பைச்சம் பாதிப்பது முறையா? மனதில் மறைந்திருக்கும் சக்திகளின் குணமதை இனம் காணும் போது மனிதரின் மகத்துவம் புரிந்துவிடும். ●

## தோல்வி

**‘என்னைச் சந்திப்பவர்கள் வெற்றியடையாமல் போவதில்லை’**

மற்றவர்களை வளர்த்து விட, குழும ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்து, வம்பு வரும்போது முன் சென்று மன்னிப்புக் கேட்டு, பல முறை காயப்பட்டாலும் மற்றவர்களைக் காயப்படுத்தாமல் தோற்றுப் போவோம். வெறுப்பவர்களுக்கும் அன்பைக் கொடுத்துத் தோற்றுப் போவோம். வம்பு செய்பவர்களுக்கும் அன்பைக் கொடுத்து தோற்றுப் போவோம். நம்மை நேசிக்காத வர்களுக்கும் நேரம் அறிந்து உதவி செய்து தோற்றுப்போவோம்.

இகழ்ந்து பேசுபவர்களைப் பற்றி நல்லதையே பேசித் தோற்றுப் போவோம். உபத்திரவம் செய்பவர்களுக்கு உதவி செய்து தோற்றுப் போவோம். அப்போது ஆன்மீக வாழ்வில் வெற்றி காண்போம்.

## சொந்தக் காலில் நில்

காட்டில் இரண்டு மாமரங்கள் ஒன்றாக வளர்ந்தன. ஒரு மரம் அடர்ந்த மரங்கள் நிறைந்த கூட்டத்தோடு வளர்ந்தது. மற்றொரு மரம் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் தனிமரமாய் நின்றது. தனியாய் நின்ற மரம் தோட்டக்காரனிடம் “நான் மட்டும் கடும் வெயில், மழை, வேகமாக சுழலும் காற்று, நடுங்கும் குளிர் இவற்றையெல்லாம் தனியே அனுபவிப்பின்றேனே” என முறையிட்டது. தோட்டக்காரன் “கவலைப்படாதே, இதெல்லாம் உன் நன்மைக்கே” என்றான். இன்னொரு மரமோ வெயில், மழை, புயலில் மற்ற மரங்களால் பாதுகாக்கப்பட்டு மகிழ்ச்சியாகக் காலம் கழித்தது. ஆண்டுகள் பல கடந்தன. ஒரு நாள் மிகப் பெரும் சூறாவளிக் காற்று அடித்தது. அதில் கூட்டமாக நின்ற மரங்கள் பல வேரோடு சாய்ந்தன. அதோடு சேர்ந்து மாமரமும் சாய்ந்தது. ஆனால் தனி மரம் மட்டும் சாயவில்லை. தனித்து இயற்கையின் சீற்றங்களைச் முதல் அனுபவித்ததால் அது தன் வேர்களை ஆழமாகப் பூமிக்குள் ஊன்றி இருந்தது. கூட்டமான மரம் தன் பாதுகாப்புக்கு மற்ற மரங்களைச் சார்ந்தே இருந்ததால் வேர்களைப் பூமிக்குள் ஆழச் செலுத்தவில்லை. பல சமயங்களில் மற்றவர்களை நம் பாதுகாப்பு என நம்பி ஏமாந்து விடுகிறோம். தன்னம்பிக்கையே சிறந்த பாதுகாப்பு.



# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

(சென்றவாரத் தொடர்ச்சி)

### கிறிஸ்தவரல்லாதோருடன் உறவு

இதனால் யாத்திரிகர்களின் தொகை வருடாவருடம் அதிகரித்தது. (மடுத்திருப்பதி நாட்குறிப்பேடு பக்.86) மடுத்திருப்பதிப் பராமரிப்பிற்கான குடியேற்றங்கள் யாத்திரைத்தலத்தை வழமையான நாட்களில் பராமரிக்கவும், திருவிழாக்களில் முன்னின்றுஉதவி செய்யவுமெனச் சின்னப் பண்டிவிரிச்சான், பெரிய பண்டிவிரிச்சானைச் சுற்றியிருந்த காட்டுப் பகுதியில் ஆயரின் ஆலோசனைக் கமைய பல கிராமங்கள் மடுத்தல நிர்வாக அருட்பணியாளரால் ஏற்படுத்தப்பட்டதோடு 1958இன் பின்பு புதிய குடியேற்றங்களும் இடம்பெற்றன. ஏனைய பல யாத்திரைத் தலங்களின் சிக்கல்கள் போன்று தமது பணியின் காரணமாக இவர்கள் மடுத் திருப்பதியில் உரிமை கோராதவாறு இவர்கள் மத்தியிலேயே இவர்களுக்கென ஆலயங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இவர்களை விட இவரது நேரடிக் கண்காணிப்பில் வேதனத்துடன் பலர் முகாமில் வாழ்ந்து பணி யாற்றினர்.

### திருவிழாக்களில் யாழ்.மறைமாவட்டத்தில் பணியிலிருந்த அருட்பணியாளர்கள்,

அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், நிரந்தர மறைப்போதகர்கள் பணியாற்றினர். தென்னிலங்கை அருட்பணியாளர்களின் உதவி சிங்கள யாத்திரிகர்களின் பொருட்டுக் கோரப்பட்டன. விழா நாட்களில் காலை முதல் மாலை வரை மூன்று மொழிகளிலும் பாவ அறிக்கை அருளடையாளம் அருட்பணியாளர்களால் வழங்கப்பட்டன. இவ்வாலயத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட மண்மனநோயாளர்களுக்கு ஒளடதமாக யாத்திரிகர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. திருவருட்பொருட்கள் மற்றும் வாகனங்கள் திருவிழாத் திருப்பலியின் பின்பு ஆசீர்வதிக்கப்பட்டன. விசேடமாகப் பல ஆலயங்களில் நற்கருணைப் பவனி, மற்றும் திருச்சொரூபப் பவனி எவ்வாறு ஒழுங்காக இடம் பெறவேண்டும் என்று செய்து காட்ட இவர் மடுத்திருப்பதியில் நற்கருணைத் தேர்ப் பவனியையும் மரியன்னை தேர்ப் பவனியையும் அழகாக, பயபக்தியுடனும் நிகழ்த்திக்காட்டினார். இவர் தொடங்கிய நடைமுறையைப் பல பங்குகள் பின்பற்றியதுடன், மடுவிலும் இன்றுவரை தொடர்கின்றது.

### பராமரிப்பிழந்த ஏனைய யாத்திரைத் தலங்கள்

போர்த்துக்கேய ஸ்பானியக் கடலோடிகள் “சமுத்திரத்தின் நட்சத்திர” மாக விளங்கும் மரியன்னை, மற்றும் யாகப்பர், அந்தோனியார், செபஸ்தியார் போன்ற பல புனிதர்களின் மேல்கொண்டிருந்த பக்தியை எமது பகுதிகளிலும் விதைத்தனர். இதன் காரணமாக சரவணை, சின்னமடு செபமாலை மாதா, வேலணை சாட்டி நல்யாத்திரை மாதா, குருநகர் புதுமை மாதா, பண்டத்தரிப்புப் பத்திமா மாதா, பாலைதீவு அந்தோனியார், கச்சதீவு அந்தோனியார், கிளாலி சந்தியோகுமையோர், தும்பளை லூர்து கெபி, பரப்புக்கடந்தான் கர்த்தர் போன்ற மறைமாவட்ட யாத்திரைத் தலங்களும் கொழும்புத்துறை செபமாலைமாதா, புல்லாவெளி செபஸ்தியார், முகமாலை பிலோமினம்மாள், செம்பியன்பற்று பிலிப்புநேரியார் தள்ளாடி அந்தோனியார், மாதகல் லூர்து கெபி, காங்கேசன்துறை ஊறணி அந்தோனியார், இளவாலை கல்லறை மாதா, பாஷையூர் அந்தோனியார் போன்ற திருவிழாக்காலங்களில் மக்கள் அதிகமாகக் கூடும் பங்குத் திருத்தலங்களும் இருந்தன. இவற்றுடன் தேசிய ரீதியில் மடுத்திருப்பதி இறை மக்களின் மறைவாழ்வின் ஆழப்படுத்தலுக்குப் பெரும் பங் காற்றியது. கத்தோலிக்கர் நல்ல பாவ அறிக்கை செய்து பழைய பாவ வாழ்வில் இருந்து திருந்தி வாழத் தூண்டியபடியால் இவை இறையருள் பெருகும் இடங்களாயின. இத்திருத்தலங்கள் பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பிற்கும் சமயங்களுடனான உரையாடலுக்கும் வழிவகுத்தன.

மடுத்திருப்பதியின் முன்னேற்றம், முக்கியத்துவம், கூடியதனாலும், மடுத்திருப்பதியின் விழாக்களுக்கேற்ப ஏனைய திருத்தலங்களின் விழாக்காலங்கள் மாற்றியமைக்கப்பட்டதாலும், ஏனைய யாத்திரைத்தலங்கள் முக்கியத்துவமிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கிளாலி, தும்பளை, புல்லாவெளி, பரப்புக்கடந்தான் போன்ற ஒரு சில யாத்திரைத்தலங்களுக்கு அருகாமையில் இருந்த மக்களால் அல்லது தூர இடங்களில் இருந்து வந்து உதவி செய்த மக்களால் பல சிக்கல்கள் தோன்றின. இவற்றின் வருமானம் குறைந்ததால் ஆயரால் பராமரிக்க முடியாத நிலையில் இவை இருந்தபடியால், இவற்றிற்கு பரம்பரைச் சொந்தம் கொண்டாடித் தூரத்தில் இருந்து வந்தவர்களின் பணபல ஆதிக்கங்களால், சிக்கலுக்குள்ளாகின. அதாவது, மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து வந்த யாத்திரிகர்கள் வழிபாடுகளில் பங்கேற்பதற்கும், அனைவராலும் தரப்படும் உண்டியல் வருமானம் மறைமாவட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்கும் பராமரிப்பாளர்களின் ஆதிக்கமனப்பான்மை இடையூறாகியது.

பத்திமாகிரி பராமரிப்பிழந்த யாத்திரைத் தலங்களுள் முக்கியமானது பண்டத்தரிப்பு ‘அரசிவரத்தடி’ ஆகும். ஆயர் கியோமரின் அனுமதியுடன் 1917இல் போர்த்துக்கல் பத்திமா நகரில் நடந்தேறிய காட்சிகளில் மரியன்னை விடுத்த வேண்டுகோள்களை மக்களிடம் பரப்பி, செப, தப, தியான, பகிர்தல் முயற்சியில் மக்களை ஈடுபடுத்த, அவ்வேளை சில்லாலைப் பங்குத் தந்தையாக இருந்த (1942-1948) ஐரோப்பிய அருட்பணியாளர் கென்றி ஜெலாண்ட் அ.ம.தி. இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்துப் ‘பத்திமா கிரி’ என்று பெயரிட்டு 1945 டிசம்பரில் இங்கு ஓர் சொரூபத்தை நிறுவியதன் காரணமாக ‘இராச முருக்கடி’, ‘அரசிவரத்தடி’ யாயிற்று. சனிக் கிழமைகளில் அயற்கிராமங்களில் இருந்தும், முதற் சனிக்கிழமைகளில் குடாநாடு மற்றும் அதற்கு அப்பால் இருந்தும் வருவோருக்காக விசேட வழிபாடுகள் இங்கு இடம்பெற்றன.

(தொடரும்...)

## யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
### பின்னணி, தோற்றம், வளர்ச்சி

### கல்விப் பணி

1865ம் ஆண்டு சட்ட சபை இலங்கையின் கல்வி முறைபற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஆணை பிறப்பித்தது. இதற்கென ஒரு உப ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இவ் ஆணைக்குழு பொன்ஜீன் அடிகளின் ஆலோசனைகளையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவரது பரிந்துரையின்படி அமையவிருக்கும் கல்வி முறையில் ஒவ்வொரு சமயப்பிரிவும் தமது சமயப்பிள்ளைகளுக்கெனப் பாடசாலைகளை ஆரம்பிக்கவும் இவ்வாறு ஆரம்பிக்கப்படும் பாடசாலைகள் அரசிடமிருந்து பண உதவி பெற உரித்துடையவையாக இருக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

மேற்படி உப ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி அரசு அப்போது செயற்பாட்டில் மத்தியப்பாடசாலை ஆணைக்குழுவை (Central School Commission) க் கலைத்தது. இதனிடத்திற்கு 1869ம் ஆண்டு பொதுக் கல்வித்துறை (Department of Public Instruction ) யை ஏற்படுத்தியது. இந்த உபகுழு இரு முக்கிய வழிகாட்டுதல்களையும் முன்வைத்தது. அவற்றுள் முதலாவது ஒவ்வொரு சமயப் பிரிவும் தமது பிள்ளைகளுக்கெனத் தனிப் பாடசாலைகளை ஏற்படுத்தலாம். இரண்டாவதாக அரசு உதவியானது பள்ளி தரமான, சமய சார்பில்லாக் கல்வியை வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்படவேண்டும். இந்த வழிகாட்டுதல்கள் சமயங்களால் நடாத்தப்படும் தனியார் பாடசாலைகளுக்கான அடிப்படையாக அமைந்தன. இந்த முறையானது உதவி பெறும் பாடசாலை முறைக்கு வழிவகுத்தன. பாகுபாடில்லாத சமயக் குழுக்களால் நடாத்தப்படும் தனியார் பாடசாலைகளின் உரிமைகளுக்காகப்போராடிய பொன்ஜீன் அடிகள் இதனால் தான் இலங்கையில் உள்ள சமயங்களால் நடாத்தப்படும் தனியார் பாடசாலை முறைமையின் தந்தையென அழைக்கப்படுகின்றார் ( Father of the Denominational School System in Sri Lanka)

அருட்பணி S.V.B. மங்களராஜா (தொடரும்...)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

– அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்

24

(சென்றவாரத் தொடர்ச்சி..)



**9.4 தென் அமெரிக்க ஆயர்களைப்போல் ஆசிய ஆயர்கள் ஏன் நடந்து கொள்ள முடியவில்லை?**

தென் அமெரிக்க நாடுகளின் பிரச்சினைகளுக்கு ஒரு பெரிய பொதுவான காரணம் தெளிவாக இருந்தது. வட அமெரிக்காவைச் சேர்ந்த செல்வந்தர்களும் அவர்களின் பணம் சம்பாதிக்கும் அடக்கு முறை அமைப்புகளும் தென் அமெரிக்க நாடுகளின் மக்களை அடிமைகளாக ஆக்கி பணம் சம்பாதித்தனர். . அவைகளுக்கு எதிராகவே தென் அமெரிக்கத் திருஅவைத் தலைவர்கள் எழுந்தார்கள்.

ஆனால் ஆசிய மக்கள் வேறுபட்ட மத கலாசார சூழலிலே இருந்த திரு அவைகளை நடத்தி வந்தனர். ஆகையால் ஒவ்வொரு நாட்டிலும் சமூகப் பிரச்சினைகள் வேறுபட்டு இருந்ததன் காரணமாக, அவைகளைப் பற்றி விளங்கிக் கொள்வது கடினமாயிற்று. தென் அமெரிக்கத் திரு அவைகளின் தலைவர்களைப் போல் ஒன்று கூடிச் செயற்படவில்லை.

2ஆம் வத்திக்கான் சங்கம் முடிந்து 5 வருடங்களின் பின்னரே, ஆசியத் திருஅவைகளின் ஆயர் சங்கங்கள் ஒன்றாக இணைந்து, 1970ஆம் ஆண்டு பாப்பரசர் 6வது சின்னப்பர் தலைமையில் ஆசிய ஆயர் சங்கங்களின் ஐக்கிய அமைப்பு (Federation of Asian Bishops Conferences FABC) ஒன்று மனிலாவில் ஆரம்பிக்கப்பட்டது ஆகையினால் 2 ஆம் வத்திக்கான் சங்கம் நடந்த பொழுது, சங்கத்தை வழி நடத்திய ஆயர்கள் இறையியலாளர்களுடன் ஆசியாவின் ஆயர்கள் பெரிதாக ஆசியப் பிரச்சினைகளைப் பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்ய முடியவில்லை.

ஆசிய ஆயர்கள் தங்கள் சமுதாயத்தின் மதங்கள் கலை கலாசாரங்களை யிட்டுப் பெருமைப்பட்டனர். 1970 ஆம் ஆண்டிற்குப் பின்பு ஒன்றாகக் கூடி, சங்கம் வெளியிட்ட முற்போக்கான பார்வையில், மத கலை கலாசார வேற்றுமைகளைப் பற்றி ஆலோசனைகளை நடத்தத் தொடங்கினா். ஆனால் தங்கள் மக்களின் சமூகப் பிரச்சினைகள் அநீதிகளையிட்டு சங்கத்தின் பின்னும் ஆழமான கருத்துப் பரிமாற்றங்களைச் செய்யவுமில்லை.

**9.5 : சமூக அநீதிகளுக்கு எதிராகச் சிறு பான்மையான தமிழ்க் கிறிஸ்தவர்கள் எதுவித போராட்டமுமின்றி, சமாளிக்கும் நிலையையே பின்பற்றினால் தமிழ் விடுதலை இறையியல் தோன்றாது.**

எத்தனையோ மனிதாபிமானமற்ற வேற்றுமைகள், அடக்கு முறைகள், நடைமுறையில் இருந்தும், இந்து மக்கள் புரட்சியோ, இந்தியக் கிறிஸ்தவர்களின் எதிர்ப்போ பெரிதாக உருவெடுக்க முடியவில்லை. விசேடமாக இந்தியக் கிறிஸ்தவர்களில் 70 வீதமானோர் மிகக் கீழ்தரமான முறையில், எதுவித மனித உரிமைகளும் இல்லாதவர்களாக, சாதிப் பட்டியலில் இடம் பெறாதவர்களாக தீண்டத் தகாதவர்களாக (dalits, out-castes, untouchables) நடத்தப்பட்டு வருகிறார்கள். இவர்களில் தலித் (Dalits) என்பவர்களின் நிலைமையை 1970 ஆம் ஆண்டுகளின் பின் கிறிஸ்தவ இறையியலாளர் கவனத்திற்கொண்டு, இயேசு சபைக் குருக்கள் அம்மக்களின் பிரதிநிதிகளைத் திரட்டி அவர்களின் மனிதாபிமானமற்ற நிலையை ஐ.நா. மட்டத்திற்கு எடுத்துச் சென்றனர்.

ஜெனீவாவிலும், தென் ஆபிரிக்காவில் டேர்பன் நகரிலும் இன வேற்றுமைக்கு எதிராக ஐ.நா. நடத்திய உலக மகாநாட்டிலும் (World Conference against Racism, Durban) தலித் மக்கள் பலர் இயேசு சபைக் குருக்களால் அழைத்து வரப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இக்கூட்டத்தில் இவர்களை நான் நேரில் கண்டு மகிழ்ந்தேன். (தொடரும்...)

## அகவை 75 தனில் அகம் மகிழ்ந்த வாழ்த்துக்கள்!

நண்பனுக்காய் உயிரையும் ஈயும்
நல்லாயன் இயேசுவின் பணிக்காய்
கரம்பொன் தாய் மணதனில்
கருவாகி உயிர்பெற்றே குருவானீர்

வையமதில் ஆன்மீகத்தையும் அறிவையும்
மெய்யிரு கண்களெனவே கருதி நீரும்
அயராது உழைத்தே குருத்துவக் களத்தில்
உயரத்தே ஏற்றிட்டீர் பலரை ஏணியாய்

அன்போடு ஆயன் பணிக்காய் அழைத்திடவே
பண்போடு முன்வந்தே தளைக்க வைத்தீர்
யாழ் திரு அவைப் பணிக்களங்களை
புகழ்ந்தே சாற்றுகின்றோம் நன்றிகளை

சுனாமியால் தூக்கி எறியப்பட்ட உயிர்கள்
போரினால் புண்ணாகிப் புரையோடிய உறவுகள்
உரிமை மீறலால் பாதிப்புறும் உள்ளங்கள்
பரிந்து நாடி நிற்கும் விடுதலைக் குரல்கள்

இவையன்றோ நின் பணித்தளமதில்
முறையாய் பண்படுத்த வேண்டிய பயிர்க்களங்கள்
அவையே ஆட்டுக்குட்டிகளின் ஆவலும்
குறையகற்றி நிறைவளித்தீர் நன்றிகள்

அகவை 75 ஆண்டுகள் கடந்திடினும்
அகமதில் 25 ஆண்டுகள் இளைஞனே
முன்னே சென்றிடுவீர் நீதியின் பாதையில்
என்னே இடரிலும் இயேசுமரி காத்திடுவார்

ஆயர் பணிதனில் பல்லாண்டுகள் நிறைவுடன்
ஆர்வமுடன் பணியாற்றிடவே மறைக்களத்தில்
ஆட்டுக்குட்டிகள் நாமும் அகம் மகிழ்ந்து
ஆண்டவன் அருளோடு வாழ வாழ்த்துகின்றேன்.

**ஆக்கம்:**
S.M.வுளோறன்ஸ் (இளவாலை)

### துணைவேந்தரின்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

உலக அரங்கில் யாழ்ப்பாணத்தின் பெருமையை நிலைநாட்ட உலகப்பிரமுகர்களுடனான அவரது சந்திப்புக்கள், அவர் வழங்கும் பலதரப்பட்ட உரைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. எமது பிரதேசத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட சிறுபான்மைச் சமுதாய மக்கள் அனைவரும் கல்வியிலும், பொருளாதாரத்திலும், வாழ்க்கைத் தரத்திலும் முன்னேற்றம் பெறவேண்டும் என்ற நன்னோக்கத்தை தாம் பொறுப்பு வகித்த எல்லாத் துறைகளிலும் செயல்வடிவமாக்கிக் காட்டியவர். ஒரு சமயத் தலைவராக இருந்தாலும் சமயச் சார்பின்மைக் கொள்கையிலும், சமய நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதிலும், அரசியல் நாகரிகத்தைக் கடைபிடிப்பதிலும், யாழ்ப்பாண மண்ணின் இறையாண்மையைப் போற்றுவதிலும் என்றைக்கும் அவர் சமரசம் செய்து கொண்டதே இல்லை எனலாம்.

ஆயர் அவர்களுக்கு அகவை 75 என்றாலும் அவரின் சீரிய சிந்தனைகளும் திறன்மிக்க செயல்பாடுகளும் என்றும் இளமையானவைதான். அவர் தொடர்ந்து கல்விப் புலத்திலும், சமயத் தலைமைத்துவத்திலும் நல்ல ஆரோக்கியத்துடன் பயணித்து, மென்மேலும் உயர்ந்து, யாழ்ப்பாண மண்ணிற்கும், தமிழ் மக்களுக்கும் தொடர்ந்து நற்பணி ஆற்றி பல்லாண்டுகள் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அகமகிழ்ந்து ஆசிகளுடன் உளங்கனிந்து வாழ்த்துகிறேன்.

### தென்னிந்திய திருச்சபை ஆயரின்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆண்டகை எனக்கு பேரிடி கொடுத்தார். “எனக்கு 75 வயதாகப் போகின்றது இந்த வருடம் இளைப்பாற போகின்றேன்” என்றார் அந்த இரவு முழுவதும் நான் நித்திரை செய்யவில்லை. ஜஸ்டின் ஆண்டகைக்கு இந்த நாட்டில் இன்னும் அனேக வேலைகள் உண்டு. தமிழ் மக்களின் “தேரும் தேரின் பாகனுமாக” அவர் நீண்ட காலம் வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

## ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. தே. யூட்தாஸ்

**252. விகாரமான அல்லது அருவருப்பான செயற்பாடுகளையும் (Calumny) கவனக்கலைப்பான்களையும் எட்டாம் கட்டளை தடைசெய்கிறதா?**
விகாரமான அல்லது அருவருப்பான செயற்பாடுகளையும் கவனக்கலைப்பான்களையும் எட்டாம் கட்டளையானது தடைசெய்கிறது. அத்தோடு கதை காவுதல் போன்ற நம் அயலாரின் நடத்தையைப் பாதிக்கக்கூடிய அனைத்தும் தடைசெய்யப்படுகின்றது.

**253.உம் அயலாரைப் பற்றித் தவறாகக் கதைத்து அவரை நீர் மனம் நோகப் பண்ணுகின்றபோது நீர் என்ன செய்யக் கடமைப்பட்டுள்ளீர்?**
என் அயலாரைப்பற்றி நான் தவறாகக் கதைத்து மனம் நோகப்பண்ணியிருந்தால் என்னால் இயன்றளவிற்கு அவரது நற்பெயரை மீட்டு அவருக்குத் திருப்தியை ஏற்படுத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒன்பதாம் கட்டளை**

**254.ஒன்பதாம் கட்டளை என்ன?** பிறர் மனைவியைக் கவர்ந்திட விரும்பாதே.

**255.ஒன்பதாம் கட்டளை எவற்றை தடைசெய்கிறது?**
ஒன்பதாம் கட்டளை பிறழ்வான சிந்தனைக்கும் ஆசைகளுக்கும் அறிவுபூர்வமாக உடன்படுதலையும், உடலின் முறைதவறிய உறவால் உருவாகும் அறிவு பூர்வமான காமத்தையும், ஆசையையும் தடைசெய்கிறது.

**256.எவ்வாறான பாவங்கள் பொதுவாக எட்டாம் ஒன்பதாம் கட்டளைகளை மீறுகின்றன?**
எட்டாம், ஒன்பதாம் கட்டளைகளை மீறுகின்ற பொதுவான பாவங்களாக பெரும் தீனித்தனம், குடிபோதை, கட்டுக்கடங்காக் கோபம், சோம்பல் தனம், கூடா நட்பு,செபிக்கத் தவறுதல் போன்றவற்றைக் கூறலாம்.

**பத்தாம் கட்டளை**

**257.பத்தாம் கட்டளை என்ன?** பிறருக்கு உரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.

**258.பத்தாம் கட்டளை எவற்றைத் தடைசெய்கிறது?**
பத்தாம் கட்டளையானது அனைத்துப் பொறாமையான, அபகரிக்கக்கூடிய எண்ணங்களையும் எம் அயலவருடைய சொத்துக்கள், இலாபங்கள் மட்டில் அநீதியான ஆசைகளையும் தடைசெய்கிறது.

**திரு அவையின் கட்டளைகள்**

**259.திரு அவைக்குக் கீழ்ப்படிய நாம் கடமைப்பட்டுள்ளோமா?**
நாம் திருஅவைக்குக் கீழ்ப்படிய கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் திரு அவையின் பணியாளர்களுக்குக் கிறிஸ்து கூறியிருக்கின்றார்: “உங்களுக்குச் செவி சாய்ப்பவர் எனக்குச் செவிசாய்க்கின்றார். உங்களைப் புறக்கணிப்பவர் என்னை புறக்கணிக்கின்றார். என்னைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பியவரையே புறக்கணிக்கின்றார்” (லூக்கா 10: 16).

(தொடரும்....)

## நல்லை ஆதீனக் குருமுதல்வரின் வாழ்த்துச்செய்தி



மேதகு யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இன்று தனது 75 ஆவது ஆண்டு வயதினை அடைந்திருப்பதை இட்டு அனைத்து சமூகத்தினரும் மன மகிழ்ச்சி அடைகின்றனர். கத்தோலிக்க திருச்சபையின் பணிகளைச் சிறப்பிக்கும் வகையில் ஆசிரியராக, அதிபராக, அருட்தந்தையாக, மறைமாவட்டத்தின் ஆயராக, எல்லோருடைய மனதையும் ஒரு முகப்படுத்தி, சமய வேறுபாடுகள் இன்றி அனைவரையும் மகிழ்விக்கின்ற மன நிறைவினைக் கொண்டவர். காலத்தினுடைய தேவைகளைக் கருத்தில் கொண்டு இன, மத வேறுபாடின்றி அனைத்து மதங்களையும், அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்திச் சேவையாற்றியவர். இன்று தனது 75ஆவது அகவையை அடைந்திருப்பதையிட்டு நாங்கள் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். வாழ்க பல்லாண்டு.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

***ஸ்ரீல.ஸ்ரீ. சோமசுந்தர தேசிக***
***ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்***
***இரண்டாவது குருமஹாசந்நிதானம்***

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



அதிவணக்கத்திற்குரிய யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் 75வது அகவையில் மலரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தீவகம், ஊர்காவற்றுறை கரம்பொன் மண்ணிலே பிறந்த ஆயர் அவர்கள் 1974 ஆம் ஆண்டில் தனது குருப்பணியை கிளிநொச்சி வலைப்பாடுக் கிராமத்தில் ஆரம்பித்தவர். கிளிநொச்சி உருத்திரபுரம், மாரீசன்கூடல், இளவாலை ஆகிய இடங்களிலும் பங்குத்தந்தையாகப் பணியாற்றியவர்.

HULL பல்கலைக்கழகத்தில் இறையியல் பட்டப்படிப்பை மேற்கொண்ட ஆயர் அவர்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் அதிபராகவும் சிறந்த கல்விச்சேவையை வழங்கிய சிறப்பிற்குரியவர். யாழ் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத் துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். மெய்யியல் கல்வியை புனித பிரான்சிஸ் சவேரியார் பெரிய குருமடத்தில் போதித்து வந்தவர்.

மனித குலத்திற்குரிய உயரிய விழுமியம், ஒழுக்கம், என்பவற்றின் உயர் பண்புகளை வெளிப்படுத்துவதாக அவரது குரல் அமைந்திருக்கிறது.

அதிவணக்கத்திற்குரிய யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இலங்கையில் நெருக்கடியான காலப்பகுதியில் தனது பணியை ஆரம்பித்து செயல்திறன் மிக்க குருவாகவும், வெளிப்படையான நீதி, சமத்துவம், ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும் விளங்கிய அதேவேளை தனது குருப்பணியை மேற்கொண்டு உயரிய யாழ். ஆயர் என்னும் பணியில் அமர்ந்து இருப்பவர் எனலாம்.

**"தவமும் தவமுடையார்க்கு ஆகும்"** என்னும் குறளின் கருத்துக்கமைய அகவை 75 இல் அவர் சிறந்த சேவையை தொடர்ந்து ஆற்றி எம்மையெல்லாம் வழிப்படுத்த இறைபிரானை பிரார்த்தித்து, மலரும் சிறப்பு மலர் சிறப்புடன் இதழ் விரிக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

***அம்பலவாணர் சிவபாலசுந்தரன்.***
***அரசாங்க அதிபர்,***
***மாவட்டச் செயலகம்,***

## ஆளுநரின் வாழ்த்துச்செய்தி



எம் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவரது 75ம் அகவையினை நினைவு கூரும் தருணத்தில் "பாதுகாவலன்" சிறப்பு மலரினூடாக வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

ஆளுநராகப் பதவியேற்ற பின் யாழ். மறைமாவட்ட ஆயரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றதும் எனது பாக்கியமே. இன்றைய சமுதாயத்தினை குறிப்பாக இளம் சமூகத்தினரை போதனையால் ஆண்டகை வழிநடத்தும் பாணி மிகச் சிறப்பானது.

இன்றைய காலகட்டத்தில் ஆண்டகையின் சேவை யாழ். மறைமாவட்டத்திற்கு இன்றியமையாதது. ஆண்டகையின் சேவை மேலும் பல்லாண்டு தொடர நான் இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

***ஜீவன் தியாகராஜா***
***ஆளுநர்***
***வடக்கு மாகாணம்***



## செஞ்சொற் செல்வரின் வாழ்த்துச் செய்தி



யாழ் ஆயர் அவர்களின் அகவை 75 பூர்த்தி குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். "பண்புடையார் பட்டுண்டு உலகு" என்ற வள்ளுவர் பெருந்தகையின் கூற்றுக்கு அமைய நிறைந்த பண்புடைய பெரியவர். பலவருட காலமாக அவரோடு பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

ஆசிரியராக, அதிபராக, பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக நாம் அவரோடு பழகிய நாட்கள் பசுமையானவை. என்றும் எனது அகம் நிறைந்த பெரியவராக விளங்கும் ஆயர் அவர்களிடம் எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற குறிக்கோள் நிறையவே உண்டு. திருக்கேதீஸ்வரம் விடயமாக அவரது அறிக்கை பலராலும் பாராட்டப்பட்டது. ஆயர் அவர்கள் சுகதேகியாக நீண்ட காலம் வாழப் பிரார்த்திப்பதோடு அவரது பவளவிழாச் சிறக்க இதய பூர்வமான வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன்

***கலாநிதி ஆறு. திருமுருகன்***
***தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்***
***தெல்லிப்பளை***

## துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் 75வது பிறந்த நாளையிட்டு வெளிவரும் 'பாதுகாவலன்' சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமிதமும், பெருமகிழ்வும் அடைகின்றேன். தனது மனித வாழ்வின் பவளவிழாவைக் காணும் ஆயர் அவர்கள் ஒரு கல்வியலாளனாகத் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை அர்ப்பணித்துப் பல நற்பிரஜைகளின் உருவாக்கத்திற்குக் காரணமாயிருந்தார் என்பது ஈழமக்களின் வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டிய விடயமாகும்.

கல்வியின் நோக்கம் மகிழ்ச்சியாகும். இம்மகிழ்ச்சி ஓர் இருவழிப்பாதையாகும். கல்வியைப் பெறுபவரும், கல்வியை ஊட்டுபவரும் அடைகின்ற திருப்தியே கல்வி தருகின்ற மகிழ்ச்சியாகும். பலரின் இம்மகிழ்ச்சிக்கு ஓர் அர்ப்பணிப்புள்ள கல்வியலாளனாக வழி சமைத்தவர் எம்மதிப்புக்குரிய ஆயர் ஜஸ்ரின் ஆண்டகை.

ஒரு சிறந்த கல்வியலாளன் மாணவர்களின் புத்தகக் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துபவரல்ல. ஒருங்கிணைந்த மானிட உருவாக்கமே கல்வியின் இறுதி இலக்காகும். தேவையான கோட்பாட்டு அறிவு, மென்திறன்கள், நேரிய மனப்பாங்கு மற்றும் உலகளாவிய பிரஜைத்துவ மன அமைப்புப் போன்றவற்றை வகுப்பறைக் கற்பித்தல்கள், மைதான விளையாட்டுச் செயற்பாடுகள் மற்றும் சமூகக் கள ஈடுபாடுகள் மூலமாகத் தனது மாணவர்களுக்கு வழங்கி அவர்களது ஒட்டுமொத்த மானிட உருவாக்கத்தில் தன்னைக் கரைத்தவர் எமது பவள விழா நாயகன் ஆயர் ஜஸ்ரின். ஒரு கல்வியலாளனாக மட்டுமல்லாது அர்ப்பணிப்பு மிக்க ஒரு சமயத்தலைவராகவும், அதுவும் பாரம்பரியமிக்க யாழ்ப்பாணக் கத்தோலிக்க மறைமாவட்டத்தின் உயர்மட்டத் தலைவராகவும் பணியாற்றிவரும் ஆயர் ஜஸ்ரின் அவர்கள் பரந்துபட்ட உலக அறிவு, மொழிப்புலமை, சாதுரியத் தலைமைத்துவம் போன்ற பேராளுமைப் பண்புகளுக்குச் சொந்தக்காரர்.

பன்மைத்துவச்சமூக, சமய, காலாசாரப் பின்னணியைக்கொண்ட யாழ்பாணப் பிரதேசத்தில் ஒரு கல்வியலாளனாக, மறைமாவட்ட ஆயராக அவர் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் அறிவு பூர்வமானவையாகவும், அர்த்தமுடையனவாகவும் இருந்து வருவதை யாரும் மறந்திடவியலாது. ☞ 07

***பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா***
***துணைவேந்தர்***
***யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்***

## தென்னிந்தியத் திருச்சபை ஓய்வுநிலை ஆயரின் வாழ்த்துச் செய்தி



எனக்கும் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்திற்கும் இடையிலான தொடர்பு முப்பத்தைந்து வருட கால பழைமை வாய்ந்தது. நான் யாழ்ப் பாணக் கல்லூரி அதிபராக இருந்த பொழுது அவர் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியின் அதிபராகவிருந்தார். வலி மேற்கு அதிபர்கள் கூட்டங்களில் அவருடன் பழக நேர்ந்தது. அப்பொழுது இந்த மாபெரும் கல்விமான் ஏன் பட்டணத்திற்கு புறம்பேயுள்ள ஒரு பாடசாலைக்கு அதிபராகவிருக்கின்றார் என்று எண்ணினேன்.

ஜஸ்ரின் ஆண்டகை வளர்ந்தார். அவருடைய வளர்ச்சியைக்கண்டு நான் பூரிப்படைந்தேன். பத்திரிசியார் கல்லூரி அதிபர், குருமுதல்வர், ஆயர் என்ற பதவிகள் அவரைத்தேடி வந்தன. யாழ் பல்கலைக்கழக உறுப்பினராக அவர் பணியாற்றிய பொழுதுதான் அவருடைய சமயப்பற்றினையும், துணிவையும், இனிய சுபாவத்தையும் கண்டு கொண்டேன். சில சமயங்களில் ஆண்டகை பல்கலைக்கழகக் கூட்டங்கள் முடிந்த பின் என்னைத் தனது காரில் எனது வீட்டிற்கு அழைத்துச் செல்வார். நகைச்சுவை நிறைந்தவர். வழி முழுவதும் ஒரே சிரிப்பு! ☞ 07

***பேராயர் . எஸ். ஜெபநேசன்***
***ஓய்வுநிலை ஆயர்***
***தென்னிந்தியத் திருச்சபை***

## குரு முதல்வரின் வாழ்த்துச் செய்தி



யாழ். மறைமாவட்டத்தின் ஆயராகக் கடந்த பல ஆண்டுகள் அளப்பரிய பணியாற்றி வரும் நமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தனது 75 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூரும் இந்த வேளையில் யாழ் மறைமாவட்டக் குருக்கள் துறவிகள் இறைமக்கள் சார்பாக இறை ஆசீர் நிறைந்த நல்வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

குருக்கள், துறவிகள், பொதுநிலை இறை மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளை, தேவைகளை, அபிலாசைகளைத் தெளிவாக உணர்ந்தவராக அவற்றுக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு உடல் உள ஆன்மீக வழிநடத்தலைக் கொடுக்கின்ற ஒரு சிறந்த ஆளுமையை நாங்கள் அவரில் அவதானிக்கின்றோம்.

எமது மறை மாவட்டத்தின் பன்முக தேவைகளில் தனது ஆற்றல்கள் திறமைகளைப் பயன்படுத்தி முழுமூச்சாகச் செயல்பட்டதினால் கடந்த பல வருடங்களில் எமது மறைமாவட்டம் அபரிமிதமான பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. அனைவரினதும் விசுவாச வாழ்வுக்கு அடிப்படையான தேவை இறைவனுடைய பிரசன்னம் நிறைந்த ஆலயங்கள் என்பதையும், மக்களின் எதிர்கால வாழ்வு சிறக்க அவசியமானவை கல்வியும் ஒழுக்கமும் என்பதையும் உணர்ந்தவராக எமது மறை மாவட்டம் முழுவதும் பல புதிய, அழகான, இறைப்பிரசன்னம் நிறைந்த ஆலயங்களையும், கல்விக் கூடங்களையும் அமைத்து மக்கள் தங்கள் விசுவாச வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ளவும், வாழ்வை மேம்படுத்தவும் எமது ஆயர் எடுத்த நடவடிக்கைகள் இவற்றிற்கு சான்றாகும்.

ஆயர் அவர்களை இறைவன் எமக்கு ஒரு கொடையாகத் தந்தமைக்காக நாம் இறைவனுக்கு நன்றி சொல்லும் அதே வேளையில் இன்னும் பல்லாண்டுகள் அவர் உடல் உள ஆன்மீக பலத்தோடு இறை பணியாற்ற இறை அருள் வேண்டுவோம்.

***அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம்***
***குரு முதல்வர்.***
***யாழ். மறைமாவட்டம்***

## கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



பண்பானவர், பாசமானவர் மட்டுமல்ல இவர் கண்டிப்பான வரும் கூட. கல்விப் புலத்தில் பணியாற்றி நல்ல கல்விக்குருவாய் திகழ்ந்ததோடுமட்டுமல்லாது கல்வி முகாமைத்துவத்திற்கு சிறந்த முன் உதாரணமாகவும் தன் கல்விப் பணிக்கு புகழ்தந்து விளங்கியமை கண்டு வியந்து நிற்கின்றோம். இறைபற்றில் மாணவர்களைத் துலங்கச் செய்த போது தேவனால் மேய்ப்புப் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு யாழ் மறைக்குத் துணிச்சலான மேய்ப்பனாக இவர் வலம் வந்ததைக்கண்டு நாம் வியந்தோம். அகவை 75 காணும் மேதகு ஆண்டகைக்கு இறையடியான் வாழ்த்துத் தெரிவிப்பதுடன், தொடர்ந்தும் இறைபணியின் காவல்தூணாக நின்று பணியாற்ற இறைவன் இவருக்கு அருள்புரிவார் என்ற நம்பிக்கையுடன் இவரை வாழ்த்தி நிற்கின்றேன்.

***தி. ஜோண் குயின்ரஸ்,***
***மாகாணக் கல்விப் பணிப்பாளர்.***
***வடக்கு மாகாணம்.***

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.